සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

හින්දු ධර්මය I
இந்து சமயம் I
Hinduism I

42 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (×)** இடுவதன் மூலம் காட்டுக.

● **01** தொடக்கம் **05** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் **பொருந்தாது**. பொருந்தாததைத் தெரிவுசெய்க.

**1.** (1) அபிஷேகம் (2) அலங்காரம் (3) நைவேத்தியம் (4) காமிகம் (5) தீபாராதனை

**2.** (1) அப்பர் (2) திருஞானசம்பந்தர் (3) மறைஞானசம்பந்தர் (4) சுந்தரர் (5) மாணிக்கவாசகர்

**3.** (1) ராஜாராம் மோகன் ராய் (2) அயோத்திதாச பண்டிதர் (3) நாராயணகுரு (4) பெரியார் ஈ. வெ. இராமசாமி (5) மகாத்மா காந்தி

**4.** (1) அதிட்டானம் (2) ஸ்தம்பம் (3) பிரஸ்தரம் (4) கோபுரம் (5) கர்ணக்கூடு

**5.** (1) பரதநாட்டிய சாத்திரம் (2) ஸ்ரீதத்துவநிதி (3) சிற்பரத்தினம் (4) சகளாதிகாரம் (5) காசிபம்

● **06** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** சோடிச் சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை**. பொருந்தாத அச்சோடிச் சொல்லைத் தெரிவுசெய்க.

**6.** (1) நல்லூர் – சிவன் கோயில் (2) வவுனிக்குளம் – சிவன் கோயில் (3) பனங்காமம் – சிவன் கோயில் (4) உருத்திரபுரம் – சிவன் கோயில் (5) ஒட்டுசுட்டான் – தான்தோன்றீச்சரம்

**7.** (1) திருவாவடுதுறை ஆதீனம் – நமசிவாய தேசிகர்
(2) தருமபுரம் ஆதீனம் – குருஞானசம்பந்த தேசிகர்
(3) மதுரை ஆதீனம் – சிவஞான தேசிகர்
(4) நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம் – சுவாமிநாத ஞானசம்பந்த தேசிகர்
(5) குன்றக்குடி ஆதீனம் – தெய்வசிகாமணி தேசிகர்

**8.** (1) ஆறுமுகநாவலர் – சைவசமயநெறி உரை
(2) பண்டிதமணி நவநீதகிருஷ்ணபாரதியார் – திருவாசக ஆராய்ச்சிப் பேருரை
(3) பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை – கந்தபுராண தக்ஷகாண்ட உரை
(4) பண்டிதமணி க. அருளம்பலவானர் – திருவாசக ஆராய்ச்சி உரை
(5) புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை – பகவத்கீதை வெண்பா

**9.** (1) பிரகிருதி – சாங்கியம் (2) அவித்தை – வேதாந்தம் (3) ஆணவம் – சைவசித்தாந்தம் (4) திவ்வியதேசம் – வைணவம் (5) தருமபூதஞானம் – பௌத்தம்

**10.** (1) சருக்கம் – சிருட்டி
(2) பிரதிசருக்கம் – ஊழியின் பின் உலகத் தோற்றம்
(3) வமிசம் – இருடிகள் போன்றோரின் காலம் அறிதல்
(4) மநுவந்தரம் – கடவுளின் காலத்தை அறிய முற்படல்
(5) வம்சானுசரிதம் – அரசர்களது வம்சங்களைக் கூறுதல்

[பக். 2 ஐப் பார்க்க

- **11** தொடக்கம் **15** வரையுள்ள வினாக்களில் **'அ'**, **'ஆ'** என்னும் நிரல்களின்கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. **'அ'** நிரலுக்கு ஏற்ற விதத்தில் **'ஆ'** நிரல் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

**11.**

| அ | ஆ |
|---|---|
| (i) சிவமயம் | A – பசு அறிவு |
| (ii) வேதாந்தத் தெளிவு | B – ஆன்மாக்கள் கன்மங்களை அனுபவிப்பதற்கும் பரத்துவம் அடைவதற்கும் காரணமாகிய வழி |
| (iii) அத்துவா | C – பிரமச்சாரிகளும் சந்நியாசிகளும் தம் கைகளில் ஏந்தி நிற்கும் சிறிய நீர்ப் பாத்திரம் |
| (iv) கமண்டலம் | D – சிவமாந்தன்மை |
| (v) ஊன்கண் | E – உபநிடதங்களில் வேதாந்தப் பொருளும் சைவசித்தாந்த உண்மைப் பொருளும் விரவி நிற்பதால், அவற்றுக்குப் பூர்வ பக்கப் பொருளை நீக்கி சைவசித்தாந்தப் பொருள் இதுவெனத் தெளிவுபடுத்தல் |

(1) ABCDE (2) DBECA (3) DEBCA (4) DECBA (5) EDCBA

**12.**

| அ | ஆ |
|---|---|
| (i) இலிங்கம் | A – கருவறையின் வாயிற்புறத்தே இடப்பக்கத்தில் அமைவது |
| (ii) இலிங்கோற்பவர் | B – கோயில் சொத்துகளைக் கண்காணிப்பவர் |
| (iii) தேவி கோயில் | C – கருவறையின் மேற்புற கோஷ்ட பஞ்சரத்தில் அமைபவர் |
| (iv) விநாயகர் | D – சிவன் கோயில் கருவறையில் அமைபவர் |
| (v) சண்டேசுவரர் | E – வலம்வரும் திருச்சுற்றில் தென்மேற்கில் வீற்றிருப்பவர் |

(1) AECBD (2) CDEAB (3) CDEBA (4) DCAEB (5) DCEBA

**13.**

| அ | ஆ |
|---|---|
| (i) காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயில் | A – இராஜேந்திர சோழன் |
| (ii) கங்கை கொண்ட சோழேச்சரம் | B – சோழர் ஆட்சியில் கட்டப்பட்டது |
| (iii) வண்ணை வைத்தீஸ்வரர் கோயில் | C – இரண்டாம் நந்திவர்மன் |
| (iv) காஞ்சி கைலாசநாதர் கோயில் | D – வைத்திலிங்கச் செட்டியார் |
| (v) பொலன்னறுவை வானவன் மாதேவீஸ்வரம் | E – இராசசிம்ம பல்லவன் |

(1) ABCED (2) ABDCE (3) CABDE (4) CADEB (5) DEABC

**14.**

| அ | ஆ |
|---|---|
| (i) அசற்காரியவாதம் | A – சிவனின் ஆவேசத்தால் தனக்கு எல்லாம் கிட்டும் என்போர் |
| (ii) அனேகான்மவாதம் | B – இல்லாதது தோன்றும் |
| (iii) அனீசுவரவாதம் | C – முப்பத்தாறு தத்துவங்களும் அசுத்த மாயையின் விளைவு எனவும் அவை அறிவற்றவையெனவும் அறிதல் |
| (iv) தத்துவக்காட்சி | D – ஆன்மாக்கள் பல உண்டு என்போர் |
| (v) ஆவேசவாதம் | E – கடவுள் இல்லையெனும் கொள்கையினர் |

(1) ABCDE (2) BCDAE (3) BDECA (4) DBCEA (5) EBDCA

**15.**

| அ | ஆ |
|---|---|
| (i) விபூதி தரித்தல் | A – உணவைக் குறைத்தேனும் விடுத்தேனும் மனம் பொறிவழிப் போகாது மெய்யன்புடன் கடவுளை நினைத்து வழிபடல் |
| (ii) உருத்திராக்கம் அணிதல் | B – விதிப்படி செபிப்பதனால் ஆன்மாவில் திருவருட்சக்தியைப் பதிந்து, மெய்ஞ்ஞானத்தைப் பிரகாசித்து அருள்வார். |
| (iii) பஞ்சாட்சர மந்திரம் செபித்தல் | C – மலங்கள் நீக்கப்பெற்று சிவத்துவப்பேற்றுக்கு அறிகுறியாதல் |
| (iv) பஞ்சாமிர்தம் | D – இறைவனின் திருவருட் பேற்றுக்கு அறிகுறி |
| (v) விரதம் | E – மாம்பழம், வழைப்பழம், பலாப்பழம், தேன், சர்க்கரை ஆகியவற்றின் கூட்டு |

(1) ABECD (2) AEBCD (3) CDBEA (4) CDEBA (5) DCBEA

[பக். 3 ஐப் பார்க்க

- **16** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு அவற்றின் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**16.** கலை வடிவங்கள் அழகுணர்ச்சியினை மாத்திரம் வெளிப்படுத்துவனவாக அமையாது, தத்துவக் கோட்பாடுகளையும் வெளிப்படுத்தி நிற்பன. பின்வரும் வடிவங்களுள் சைவசித்தாந்த முழுமுதற் பொருட் தத்துவத்தைச் சித்திரிக்கும் வடிவம்
(1) தட்சணா மூர்த்தம் (2) சந்திரசேகர மூர்த்தம் (3) நடராஜ மூர்த்தம்
(4) பைரவர் மூர்த்தம் (5) இலிங்கோற்பவ மூர்த்தம்

**17.** இருபதாம் நூற்றாண்டிலே சைவ சமூகத்தின் சமயம், கல்வி, அரசியல் முதலான துறைகளின் வளர்ச்சியின் பொருட்டு உழைத்த சைவப்பெரியார்
(1) சேர். பொன் அருணாசலம் (2) சேர். கந்தையா வைத்தியநாதன்
(3) காரைநகர் ச. அருணாசல உபாத்தியாயர் (4) பாவலர் துரையப்பாபிள்ளை
(5) சேர். பொன் இராமநாதன்

**18.** விஷ்ணுவின் அவதார மூர்த்திகளுள் ஆவேச மூர்த்தியாக அமையும் வடிவம்
(1) இராமர் (2) கண்ணன் (3) பரசுராமன்
(4) திருமங்கையாழ்வார் (5) திரிவிக்கிரமன்

**19.** வேதங்கள் சைவசமயக் கோட்பாடுகளை உள்வாங்கி உள்ளன என்பதைக் காட்டிலும் சைவசமயம் வேதங்களையும் அதில் பேசப்படும் சிந்தனைகள் சிலவற்றையும் அங்கீகரித்துள்ளது எனலாம். அவற்றுள் மிக முக்கியமானதொன்று
(1) வேள்வி (2) பிராமண நூல் (3) நமசிவாய மந்திரம்
(4) சதருத்ரீயம் (5) ரிதம்

**20.** இந்திய தத்துவ உலகில் 'வேதாந்தம்' என்றால் அது சங்கரரின் வேதாந்தத்தையே குறிக்கும். சங்கரரது வேதாந்த தத்துவத்துக்கு முன்னோடியாக விளங்கியவர்
(1) பாதராயனர் (2) பிரபாகரர் (3) கௌடபாதர்
(4) சபரர் (5) பாஸ்கரர்

**21.** இருபதாம் நூற்றாண்டிலே சைவசமய வளர்ச்சியின் பொருட்டுப் பெரும்பணியாற்றிய நிறுவனம்
(1) சைவவித்யா விருத்திச் சங்கம் (2) சைவ பரிபாலன சபை
(3) விவேகானந்த சபை (4) இராமகிருஷ்ண மிஷன்
(5) அகில இலங்கை இந்து மாமன்றம்

**22.** இந்திய மருத்துவ வளர்ச்சியில் அறுவைச் சிகிச்சையின் தந்தையாகக் கருதப்படுபவர்
(1) ஆத்திரேயர் (2) சரகர் (3) தன்வந்தரி
(4) அக்கினிவேசர் (5) சுஸ்ருதர்

**23.** இந்து தத்துவங்களில் காலத்தால் முற்பட்டதாகக் கருதப்படுவது
(1) மீமாம்சை (2) நியாயம் (3) வேதாந்தம்
(4) சாங்கியம் (5) சைவசித்தாந்தம்

**24.** 19ஆம் நூற்றாண்டில் சைவசமய வளர்ச்சியின் பொருட்டு வெளிவந்த முதற் பத்திரிகை
(1) இந்து சாதனம் (2) சைவ உதயபானு
(3) விஞ்ஞானவர்த்தினி (4) இலங்கை நேசன்
(5) சைவ போதம்

**25.** ஆணவத்தின் குணங்கள் மூன்று அடங்கும் தொகுதி
(1) மோகம், மதம், விகற்பம் (2) இராகம், நகை, அஞர்
(3) கற்பம், விசித்திரம், குரோதம் (4) விசித்திரம், கொலை, குரோதம்
(5) நியதி, மதம், மோகம்

**26.** வைணவ சமயப் பக்தனுக்கு இருக்க வேண்டிய பண்புகள் மூன்று அடங்கும் தொகுதி
(1) விவேகம், நம்பிக்கை, முகமலர்ச்சி (2) அப்பியாசம், சத்தியம், அறிபவன்
(3) விமோசனம், ஆர்ஜயம், உடையவன் (4) கிரியை, தயை, நாயகன்
(5) கல்யாணம், அகிம்சை, ஆழ்பவன்

**27.** அட்டமா சித்திகளுள் மூன்று அடங்கும் தொகுதி
(1) நியமம், பிராகாமியம், மகிமா (2) இயமம், விசித்துவம், பேதமை
(3) அணிமா, மகிமா, பிராகாமியம் (4) சமாதி, கரிமா, மோகனம்
(5) கரிமா, பிராப்தி, வசியம்

**28.** சங்கரரின் வேதாந்த தத்துவங்கள் மூன்று அடங்கும் தொகுதி
(1) விவர்த்தவாதம், பிரகிருதி, அஜாதவாதம் (2) மாயை, அவித்தை, பிரதிவிம்பவாதம்
(3) அவித்தை, புருடன், அவச்சேதவாதம் (4) ஈசுவரன், ஞானம், சாலோபம்
(5) வியாவகாரியம், பரமார்த்திகம், பிரபத்தி

[பக். 4 ஐப் பார்க்க

1743

**29.** சிவனின் அருவத்திருமேனிகள் மூன்று அடங்கும் தொகுதி
(1) பிரமன், சிவம், நாதம்
(2) சிவம், உருத்திரன், விந்து
(3) சிவம், நாதம், விந்து
(4) பிரமன், விந்து, சிவம்
(5) சிவம், சக்தி, உருத்திரன்

**30.** இந்துக்களின் சமய நம்பிக்கைக்கும் வாழ்க்கை முறைக்கும் நாளாந்த ஒழுங்குகளுக்கும் வழிகாட்டியாய் அமைவது
(1) பத்திரிகை
(2) கைரேகை சாத்திரம்
(3) பஞ்சாங்கம்
(4) நாட்காட்டி
(5) கிளி சோதிடம்

- **31** தொடக்கம் **35** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின்கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

**31. சைவசமய முயற்சிகள்**
(1) 19ஆம் நூற்றாண்டில் ஈழநாடு அந்நியர் ஆட்சியின்கீழ் கிறிஸ்தவ மதத்தின் செல்வாக்குக்குட்பட்டு இருந்தது.
(2) கிறிஸ்தவ மிஷனரிமார்கள் தமிழ்மொழி ஆரம்பப் பாடசாலைகளையும் ஆங்கில உயர் பாடசாலைகளையும் அமைத்ததோடு அவற்றில் சமூக ஏற்றத்தாழ்வுகள் பாராட்டாமலும் ஆண்-பெண் வித்தியாசம் பார்க்காமலும் ஒரு கூரையின்கீழ் கற்பித்து வந்தனர்.
(3) சைவ சமயிகளும் தமது சமயத்தையும் கல்வியையும் வளர்த்தற் பொருட்டு பல முயற்சிகளை மேற்கொண்டனர்.
(4) நாவலரும் அவரது மாணாக்கர்களும் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பெயரில் பாடசாலைகளை அமைத்தனர். அதன் பொருட்டு அச்சியந்திரசாலைகளை நிறுவி ஏடுகளையும் நூல்களையும் துண்டுப்பிரசுரங்களையும் வெளியிட்டனர்.
(5) இக்காலப் பகுதியில் சைவர்கள் தமது பிரதிநிதி ஒருவர் சட்டநிரூபன சபையில் இருக்க வேண்டியதன் அவசியம் கருதி பொன்னம்பல முதலியார் இராமநாதனைத் தமது பிரதிநிதியாகத் தெரிவுசெய்தனர்.

**32. சிந்துவெளிச் சமூகமும் சமயமும்**
(1) மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலான நகரங்கள் சிந்துவெளி நாகரிகத்தைப் பிரதிபலிப்பனவாகும்.
(2) இங்கு வாழ்ந்த மக்கள் விவசாயத்தையும் வாணிபத்தையும் தமது அடிப்படைத் தொழில்களாகக் கொண்டிருந்தனர்.
(3) இங்கு கண்டெடுக்கப்பட்ட யோகியின் வடிவம் சிவனின் தோற்றத்தை ஒத்ததென்பர்.
(4) இம்மக்களின் வாழ்வியல் அம்சங்கள் ஆரியர் வழிவந்தன என்பர்.
(5) இம்மக்களின் சமய நம்பிக்கை, வாழ்வியல் முறைமை என்பன திராவிட மக்களின் வாழ்வியல் அம்சங்களை ஒத்தன என்பர் அறிஞர்.

**33. சாதனையும் முத்தியும்**
(1) இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம் என்பார் நாவலர்.
(2) இறைவனை வழிபட்டு முத்திபெற, சைவம் நால்வகைச் சாதனங்களின் அவசியம் பற்றி வற்புறுத்துகிறது.
(3) சாதனைகள் என்பது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை மார்க்கங்களாகும்.
(4) வேதாந்திகள் இறைவனை அடைவதற்கு ஞானத்தையும் பிரபத்தியையும் வற்புறுத்துவர்.
(5) தாழ் + தலை = தாடலை என்பதுபோல் இரண்டு அற்ற தன்மை உடையதாய் இறையுடன் ஆன்மா உடனாதலே முத்தி என்பர்.

**34. வேதாந்த தத்துவத்தில் மத்துவர்**
(1) வேதாந்த தத்துவவாதிகளுள் மத்துவருமொருவர்.
(2) சங்கர வேதாந்தத்தை முழுமையாக மறுப்பவர் அவர்.
(3) சங்கரர் அத்வைதம் என்னும் சொல்லுக்கு இன்மைப் பொருள் கொண்டு, ஒன்றே உண்மைப் பொருள் என்பதை நிறுவ முற்பட்டார். இதன் அடிப்படையில் விவர்த்தவாதம் முதலான வாதங்களையும் ஈசுவரன், மாயை, அவித்தை முதலான கோட்பாடுகளையும் முன்வைத்தார்.
(4) மத்துவர் அத்வைதம் என்னும் சொல்லுக்கு இரண்டு எனப் பொருள் கொண்டு, ஆன்மா வேறு, இறைவன் வேறு என்றும் ஈசுவரன், சீவன், சடம் ஆகிய பொருள்களும் நித்தியமானவையெனக் கொண்டார்.
(5) "சில ஆன்மாக்கள் நரகத்தை அடைந்து நரகவாசிகளாகவே இருக்கும்" என்னும் இவரது கொள்கை பல தத்துவவாதிகளின் கண்டனத்துக்கு உட்பட்டது.

**35. இரண்டாம் சிவாலயம் - பொலன்னறுவை**
(1) பொலன்னறுவையில் சோழர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட சிவாலயங்களுள் மிகச் சிறப்பு வாய்ந்த ஆலயம் இரண்டாம் சிவாலயம் ஆகும்.
(2) இவ்வாலயத்தினை வானவன் மாதேவீஸ்வரம் என்றும் அழைப்பர்.
(3) இவ்வாலயம் அதிட்டானம் முதல் விமானம் வரையுள்ள ஆலயத்துக்குரிய முழுவடிவமும் கொண்டது.
(4) இதன் வளாகத்தில் பிள்ளையார் கோயில் தனி ஆலயமாகக் காணப்படுகின்றது.
(5) வானவன் மாதேவீஸ்வரத்தின் அமைப்பும் அழகும் தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தின் அழகிற்கும் அமைப்புக்கும் ஒப்பானது.

[பக். 5 ஐப் பார்க்க

- மேல்வரும் பகுதியில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் **36** தொடக்கம் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>பெரிய திருவந்தாதி | B<br>கோபாலகிருஷ்ண பாரதியார் | C<br>திருமந்திரம் | D<br>தண்டி | E<br>ஆண்டார்கள் |
| F<br>அண்ணாமலை ரெட்டியார் | G<br>நமிநந்தி | H<br>மகேஸ்வரர் | I<br>ஞானாமிர்தம் | J<br>திருப்பாவை |

**36.** சிவஞானபோதத்திற்கு முன்னெழுந்த சித்தாந்த நூல்கள்
(1) A F (2) B J (3) C I (4) C J (5) E G

**37.** சரியை வழிபாட்டினை இயற்றி முத்தி அடைந்த அடியார்கள்
(1) A G (2) B F (3) C G (4) D G (5) D H

**38.** 19ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் தமிழிசையை வளர்த்த இசைஞானிகள்
(1) A F (2) B F (3) B G (4) D F (5) E H

**39.** படிப்போரை விஷ்ணுவின் பரத்துவத்துக்குட்படுத்தும் நூல்கள்
(1) A G (2) A J (3) B I (4) C J (5) D I

**40.** சோழர் காலத்திலே கோயிற் பண்டங்களையும் சொத்துகளையும் ஆட்சி செய்தோர்
(1) A G (2) C G (3) D F (4) E F (5) E H

- சைவசமயத்தின் வளர்ச்சிப் பின்னணிகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு **41** தொடக்கம் **46** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

**மெய்கண்டாரின் பணிகள்**

மெய்கண்டார் இறையருள் மிக்கவர். சைவசமயத்துக்கு உயர் தத்துவமாகிய சைவசித்தாந்த சிந்தனையை உருவாக்கியவர். அதன்பொருட்டு அவர் பல பணிகளை மேற்கொண்டார். அவர் பற்றிய சில தகவல்கள் வருமாறு:

A – மெய்கண்டார் ஒரு தவப்புதல்வர். திருவெண்காட்டில் உறையும் சிவனின் திருவருள் பெற்றவர்.

B – திருஞானசம்பந்தரின் குணவியல்புகளைப் பெற்றவர். திருக்கைலாசப் பரம்பரையில் வந்த பரஞ்சோதி முனிவரிடம் தீட்சா நாமம் பெற்றவர்.

C – சங்க காலம் முதல் சோழர் காலம் வரையுள்ள காலப்பகுதியில் சைவம் பல்வேறு தத்துவ சிந்தனைகளைக் கொண்டிருந்தது. அவற்றை எல்லாம் ஒருங்கிணைத்து சைவசித்தாந்தம் என்னும் கோட்பாட்டினை உருவாக்கியவர்.

D – சைவசிந்தாந்தத்தின் பிரமாண நூல் மெய்கண்டார் இயற்றிய சிவஞானபோதமாகும். இந்நூல் பன்னிரு சூத்திரங்களையும் எண்பத்தொரு உதாரண வெண்பாக்களையும் கொண்டது. இதற்கு வழிநூலும் சார்பு நூல்களும் உண்டு.

E – மெய்கண்டாரிடம் உபதேசம் பெற்றோர் நாற்பத்தொன்பது பேர் என்பர். அவர்களுள் அருணந்தி சிவாசாரியார், மனவாசகங்கடந்தார், நமசிவாய தேசிகர், ஞானசம்பந்த தேசிகர் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

F – இவரது மாணாக்கர்களுள் சிலர் பல நூல்களையும் மடாலயங்களையும் தோற்றுவித்துள்ளனர். அருணந்தி சிவாசாரியார் வழிநூலாகிய சிவஞானசித்தியாரையும் நமசிவாய தேசிகர் திருவாவடுதுறை ஆதீனத்தையும் தோற்றுவித்தமை குறிப்பிடத்தக்கது.

**41.** சைவசித்தாந்த உருவாக்கத்தையும் அதன் முதல் நூலின் உள்ளடக்கத்தையும் குறித்து நிற்கும் பொருத்தமான சேர்மானம்
(1) A B (2) B C (3) C D (4) D E (5) E F

**42.** மெய்கண்டார் தவப்புதல்வர், ஞானி என்பதனை வெளிப்படுத்தும் பொருத்தமான சேர்மானம்
(1) A B (2) A D (3) B C (4) C D (5) E F

**43.** மெய்கண்டாரின் புலமைமைக்கும் ஞானத்தின் இருப்புக்கும் பொருத்தமான சேர்மானம்
(1) A B (2) B C (3) C D (4) D E (5) E F

[பக். 6 ஐப் பார்க்க

**தத்துவ உருவாக்கத்தில் நாலாயிரத் திவ்விய பிரபந்தம்**

வைதிக மதங்களுளொன்று வைணவம். அது தமிழ் நாட்டில் தனித்தன்மையுடன் விளங்குகின்றது. அதனது பரத்துவம் பற்றிய சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – வைணவத்தின் முழுமுதற் கடவுளாகிய விஷ்ணு தமிழ் நாட்டில் திருமால் என்னும் பெயரில் போற்றப்படுகின்றார்.

B – திருமால் தன்மேல் ஆழ்ந்த பக்தி கொண்டோருக்கு அருள்பாலிப்பார்; திருமாலிடம் பக்தியுடையோர் ஆழ்வார் எனப்படுவர்.

C – ஆழ்வார்கள் திருமாலின் அனுக்கிரகத்தால் அவனது இருப்பையும் அற்புதங்களையும் வெளிப்படுத்தினர்.

D – அவ்வகையில் ஆழ்வார்களின் பாசுரங்கள் தெய்வீகத் தன்மையைப் பெற்றவை என்னும் உண்மை நிறுவப்பட்டது.

E – இப்பாசுரங்கள் நாலாயிரத் திவ்விய பிரபந்தம் என்னும் பெயரில் நாத முனிவரால் தொகுக்கப்பட்டன.

F – இராமானுஜர் வேதாந்தத்திலே புதிய பரிணாமங்களை ஏற்படுத்தவும் விசிட்டாத்வைதம் என்னும் கோட்பாட்டை உருவாக்குவதற்கும் வித்திட்டது இத் திவ்விய பிரபந்தமேயாகும்.

**44.** விஷ்ணுவின் பெருமையை விளக்கும் சேர்மானம்
(1) A B (2) A C (3) C D (4) D E (5) E F

**45.** ஆழ்வார்களின் பாசுரங்களின் ஆற்றலைப் புலப்படுத்தும் பொருத்தமான சேர்மானம்
(1) A C (2) B C (3) B E (4) C D (5) D E

**46.** ஆழ்வார்களின் பாசுரங்கள் வைணவ சமயத்திலும் கோட்பாட்டிலும் பெறும் முக்கியத்துவத்தை விளக்கும் சேர்மானம்
(1) A E (2) B C (3) C D (4) D F (5) E F

- **47** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின்கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமானதைத் தெரிவுசெய்க.

**47. திருமுறையின் தெய்வத்தன்மையும் ஓதலும்**
(1) திருமுறைகள் தெய்வத்தன்மை பொருந்தியவை.
(2) இறைவன் உவந்தேற்கும் பாக்களுள் தேவாரமும் திருமுறைகளும் முதன்மையானவை.
(3) வேத ஆகமங்களைக் காட்டிலும் இறைவனுக்கு உகந்த பாக்கள் தேவார திருவாசகமே என்பார் நாவலர்.
(4) திருமுறைகள் தெய்வத்தன்மை மிக்கதால், அதன் திருவருட்திறத்தால் பல அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டன.
(5) தெய்வத்தன்மை கொண்ட திருமுறைகள் ஆலய சந்நிதிகளிலும் அவற்றின் கிரியைகளின் பொழுதும் ஓதப்பட வேண்டியவையாகும்.

**48. விபுலானந்தரும் அவரது பக்திக் கோட்பாடும்**
(1) விபுலாநந்த அடிகளார் புலமையும் பக்தியும் மிக்க ஞானி.
(2) அவர் அறிவும் அறிவாராய்ச்சியும் உடைய அறிஞர்.
(3) அவர் கணேச தோத்திர பஞ்சகம், சுப்பிரமணிய சுவாமி இரட்டை மணிமாலை முதலான பக்திப் பிரபந்தங்களைப் பாடியுள்ளார்.
(4) இறைவனிடத்து சரணாகதியே பக்தி அல்லது பிரபக்தி என்பார்.
(5) அடிகளார் தூய்மையான தாமரை போன்ற உள்ளத்தை இறைவனுக்கு அர்ப்பணம் செய்வதே உயர்ந்த பக்தி என்பதை 'உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது' என எடுத்துரைப்பார்.

**49. சிவவாக்கியரும் அவரது தத்துவ முக்கியத்துவமும்**
(1) சிவவாக்கியர் புலமையாளர், சித்தர், ஞானி.
(2) அவர் 'சிவசிவ' என்று சொல்லிக் கொண்டு பிறந்தமையினால் சிவவாக்கியர் எனப்பட்டார்.
(3) 'கோவிலாவது ஏதடா ?, குளங்களாவது ஏதடா ?' என்னும் அடிகள் மூலம் பொருளற்ற சடங்குகளையும் சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும் புறந்தள்ளுவார்.
(4) "ஒவ்வொரு மனிதனும் இறைவனை அடைவதற்கு தானே முயற்சிக்க வேண்டும். அவன் எப்பொழுதும் நமசிவாய மந்திரத்தை ஓதுதல் வேண்டும்" என்பார்.
(5) 'நாழி உப்பும் நாழி அப்பும் நாழியானவாறு போல' என்னும் அடிகள் 'அப்பினொடு உப்பு' என்ற சித்தாந்தக் கோட்பாட்டினை நினைவு கூர்வதாக அமையும்.

**50. புராணம் ஒரு கலைக்களஞ்சியம்**
(1) புராணம் என்பது பழைமை அல்லது பூரணத்துவம் எனப் பொருள்படும்.
(2) புராணங்கள் பஞ்ச இலக்கணங்களைக் கொண்டவை.
(3) மகா புராணங்கள் ஐந்து வகைப்படும். சிவன், விஷ்ணு, அக்கினி, சூரியன், பிரமா முதலானவை, தெய்வங்களின் மருத்துவம் பற்றிப் பேசும்.
(4) புராணங்கள் இந்து தத்துவங்களின் பொருள் மரபினை விளக்குவன.
(5) தல புராணங்கள், கலைகள், பிரபந்தங்கள் முதலான யாவற்றுக்கும் கலைப் பொக்கிஷமாக விளங்குவது புராணங்களேயாகும்.

* * *

AL/2014/42/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

| | | | |
|---|---|---|---|
| හින්දු ධර්මය II<br>இந்து சமயம் II<br>Hinduism II | 42 T II | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இல் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I

**1.** சங்ககால மக்களின் தெய்வ நம்பிக்கைகளும் வழிபாடுகளும் அவர்கள் தம் சமயத்தைப் பிற்காலத்தில் உயர்நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

(அ) சங்ககாலச் சூழ்நிலையையும் மக்களின் தெய்வ நம்பிக்கைகளையும் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(ஆ) இறைவனின் இருப்பையும் தோற்றப் பொலிவையும் நாயன்மாரின் பாடலொன்றினைத் துணையாகக்கொண்டு சுருக்கமாக விளக்குக.

(இ) பல்லவர்காலச் சைவசமய வளர்ச்சியில் பக்தி இயக்கம் பெற்ற செல்வாக்கினைச் சுருக்கமாக விளக்குக.

(ஈ) சோழர் காலத்தில் சைவசமயம் தோத்திரங்களையும் கோட்பாடுகளையும் கொண்ட நெறியாக வளர்ந்தவாற்றைச் சுருக்கமாக எடுத்துக்கூறுக.

**2.** வேதாந்த தத்துவ சிந்தனையில் புதிய கைங்கரியங்களை ஏற்படுத்தியவர் இராமானுஜர் ஆவார்.

(அ) வேதாந்தம் என்பதன் பொருளை எவ்வாறு விளங்கிக் கொள்கிறீர் ?

(ஆ) வேதாந்த தத்துவங்களை எடுத்துரைத்த ஆசிரியர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்கள் பற்றிய சுருக்கக் குறிப்புரைகள் வரைக.

(இ) இராமானுஜரின் கைங்கரியங்களை முன்வைக்குக.

(ஈ) அவரின் கைங்கரியங்களின் அடிப்படையில் அவர் நிறுவிய கோட்பாட்டைத் தெளிவுபடுத்துக.

**3.** மேல்வருவனவற்றை சைவசித்தாந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆராய்க.

(அ) பதியின் இருப்பினை நிறுவும் முறை (ஆ) பதியின் இயல்புகள்

(இ) ஆன்மாவுக்கும் பதிக்கும் இடையேயான தொடர்பு (ஈ) முத்தி

## பகுதி II

**4.** ஈழநாட்டில் பல சிறு தெய்வ வழிபாடுகள் மேனிலை ஆக்கம் பெற்றுள்ளன.

(அ) மேனிலை ஆக்கம் பெற்றுள்ள **ஐந்து** சிறு தெய்வங்களின் பெயர்களைத் தருக.

(ஆ) அவற்றுள் ஏதேனும் ஒன்றினைத் தெரிந்து, அதன் தோற்றத்தினையும் மரபுவழிப்பட்ட சடங்கினையும் விளக்குக.

(இ) நீர் தேர்ந்தெடுத்த சிறுதெய்வ வழிபாடு எவ்வகையில் மேனிலை ஆக்கம் பெற்றுள்ளது என்பதனைச் சுருக்கமாக விளக்குக.

(ஈ) சிறு தெய்வங்கள் மேனிலை ஆக்கம் பெறுவது விரும்பத்தக்கதா ? உமது விடைக்கான காரணங்களை முன்வைக்குக.

**5.** மேல்வருவோருள் யாரேனும் ஒருவரைத் தெரிந்து, அவர் சமய வளர்ச்சியின் பொருட்டு ஆற்றிய பணிகளை மதிப்பிடுக.

(அ) நம்மாழ்வார் (ஆ) பெரியாணைக்குட்டிச் சித்தர் (இ) இந்துபோட் சு. இராசரத்தினம்

**6.** சைவசமய வளர்ச்சியில் கந்தபுராணம் கொண்டிருக்கும் வகிபாகத்தினை ஆராய்க.

**7.** மேல்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு சுந்தரமூர்த்தி நாயனார் பற்றி விவரிக்குக.

(அ) சுந்தரமூர்த்தி நாயனார் வாழ்ந்த காலச் சூழ்நிலை

(ஆ) அவரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

(இ) இறைநிலைப்பட்ட அற்புதங்களும் பணிகளும்

(ஈ) சைவசித்தாந்த உருவாக்கத்தில் அவரின் பங்கு

**8.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **நான்கினுக்குக்** குறிப்பு எழுதுக.

(அ) நல்வழி (ஆ) திருவாவடுதுறை ஆதீனம்

(இ) கோபுரம் (ஈ) சாக்தம்

(உ) பிரம்மசூத்திரம் (ஊ) பிள்ளையார் வழிபாடு

* * *